# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

கைத்தொழில் வெளியீடு முன்னைய ஆண்டின் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் 5 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசதுறைக் கைத்தொழில்களின் உற்பத்திப் பெறுமதி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தனியார் துறைக் கைத்தொழிலின் உற்பத்திப் பெறுமதி 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் கைத்தொழில் வெளியீட்டின் குறைந்த வளர்ச்சிக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வேறு சில முக்கிய அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் குறைந்த செயலாற்றமுமே முக்கிய காரணங்களாகும். தனியார்துறைக் கைத்தொழில்கள் 1985 இல் வலுவான வளர்ச்சியை எடுத்துக் காட்டியபோதும் இது முன்னைய ஆண்டினைவிட குறைவானதொன்றாகும்.

கைத்தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட முக்கிய பின்னடைவு அரச துறையிலிருந்தே ஏற்பட்டது. அரசதுறைக் கைத்தொழில் உற்பத்தியில் பெற்றோலியத்தின் உயர்ந்த அளவு இத்துறையின் வெளியீட்டில் ஏற்பட்ட 6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. பெற்றோலிய கைத்தொழில் நீங்கலாகப் பார்க்கும் பொழுது ஏனைய அரசதுறைக் கைத்தொழில்கள் 2 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்தன.

தனியார்துறையில் உணவு, குடிபானம், புகையிலை, புடவைகளும் அணியும் ஆடைகளும், தாளும் தாள் உற்பத்திகளும் ஆகியவற்றில் எற்பட்ட உற்பத்தி அதிகரிப்புக்கள் வெளியீட்டினை 20 சதவீதத்தினால் உயர்வடையச் செய்தன.

1985 இன் கைத்தொழில் செயலாற்றம் சாதகமற்ற வெளிநாட்டு உள்நாட்டுக் காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. புடவை ஏற்றுமதிகளின் மீதான அனுமதிப் பங்கும் ஏனைய வெளிநாட்டுக் கட்டுப்பாட்டு வழிமுறைகளும் ஏற்றுமதி வளர்ச்சியினை மட்டுப்படுத்தியது. அதே சமயம் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான குறைந்த கேள்வியும் ஏற்றுமதிகளின் வளர்ச்சியின்மீது மந்தநிலையை ஏற்படுத்தியது. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இனக் கலவரங்களும் இப்பிரதேசங்களிலமைந்துள்ள சில அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் குறைந்த செயலாற்றத்திற்குக் காரணமாகவிருந்தன.

குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்கள் வரவு செலவுத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் கைத்தொழில்களுக்குப் பயனுடைய பாதுகாப்பினை வழங்கல், ஏற்றுமதி உற்பத்தியிலீடுபட்டுள்ள கைத்தொழில்களை ஊக்குவித்தல், கூட்டப்பட்ட உள்நாட்டுப் பெறுமதியை உயர்வாகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவித்தல் ஆகியன தீர்வைக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகவிருந்தன.

முதலீடு

1985 இல் கைத்தொழில் முதலீட்டில் மேலுமொரு வீழ்ச்சி காணப்பட்டது. முதலீட்டில் வீழ்ச்சியடைந்து செல்கின்றதொரு போக்கு 1983 இல் இருந்து கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு, வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு, உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு என்பனவற்றில் தெளிவாகக் காணப்பட்டது. 1985 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ரூ. 2,860 இலட்சம் கொண்ட உள்ளார்ந்த முதலீட்டுடன் 13 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இவ்வாண்டின் இறுதியில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு மொத்தமாக 211 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இவற்றில் 119 தொழில் முயற்சிகள் பல்வேறுபட்ட கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்காகக் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு 1985 இல் 30 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்கள் ரூ. 2,200 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கூறுகளுடன் மொத்தமாக ரூ. 4,760 இலட்சம் கொண்ட முதலீட்டினை எதிர்நோக்கின. இச்செயற்றிட்டங்களில் மூன்று மட்டுமே புடவைத் தொழில் சார்ந்தவையாகும். இச்செயற்றிட்டங்களின் மொத்தத் தொழில்நிலை உள்ளார்ந்த வளம் 2,503 என மதிப்பிடப்பட்டுள்ளது. 1985 இறுதியில் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினது செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 237ஆகும்.

கைத்தொழில் அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத்தொழில், கடற்றொழில் ஆகிய அமைச்சுக்களிலுள்ள உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுக்களின் ஒப்புதல்கள் முன்னைய ஆண்டின் 474 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 344 செயற்றிட்டங்களாகவிருந்தது. 1985 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் ரூ. 3,210 இலட்சம் கொண்ட முதலீட்டினை எதிர்நோக்குவதுடன் 12,850 ஆட்களுக்குத் தொழிலினையும் வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உற்பத்தி

நடைமுறை நியதிகளில் கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1984 ஆம் ஆண்டின் 25 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 9 சதவீதத்தினால் அதிகரித்திருக்கின்றதென மதிப்பிடப்பட்டுள்ளது. பெற்றோலிய உற்பத்திகளின் பெறுமதி நீக்கப்படும்பொழுது கைத்தொழில் உற்பத்தி 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது. தாளும் தாள் உற்பத்திகளினதும் பெறுமதி 31 சதவீதத்தாலும், புடவைகளினதும் அணியும் ஆடைகளினதும் பெறுமதி 26 சதவீதத்தினாலும், உணவு, குடிபானம், புகையிலையின் பெறுமதி 32 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளன. உற்பத்திப் பெறுமதியில் முக்கிய வீழ்ச்சிகள் அடிப்படை உலோக உற்பத்திகள் (38 சதவீதம்), இரசாயன, பெற்றோலிய உற்பத்திகள் (9 சதவீதம்) ஆகியவற்றில் காணப்பட்டன.

அட்டவணை 1·12

## கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1981--1985

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1981 | 1982 | 1983 | 1984 | 1985(அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 4,496 | 5,246 | 6,998 | 8,623 | 10,497 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 3,040 | 3,863 | 5,136 | 7,565 | 9,505 |
| 3. மர, மர உற்பத்திகள் (தளபாடங்கள் உட்பட) ... | 315 | 361 | 522 | 640 | 705 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 626 | 725 | 901 | 907 | 1,187 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 12,015 | 13,099 | 11,888 | 14,328 | 13,104 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) ... | 1,250 | 1,370 | 1,468 | 1,829 | 1,854 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 428 | 262 | 302 | 199 | 123 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 782 | 904 | 1,129 | 1,456 | 1,592 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 58 | 74 | 90 | 106 | 125 |
| மொத்தம் | 23,010 | 25,904 | 28,434 | 35,653 | 38,692 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

உண்மை நியதிகளில் அளவிடப்பட்டவாறு 1985 இல் கைத்தொழில் வெளியீடு 1984 இன் 15 சதவீதம் கொண்ட மெச்சத்தக்க வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. இது தனியார் துறைக் கைத்தொழிலில் ஏற்பட்ட 20 சதவீத வளர்ச்சியினதும் அரசதுறைக் கைத்தொழிலில் ஏற்பட்ட 6 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பெற்றோலியம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட 15 சதவீத வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். அரச, தனியார் துறைகளில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு தவிர்ந்த மொத்தக் கைத்தொழில் உற்பத்தி 9 சதவீதத்தினுல் அதிகரித்தது.

வெளியீட்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த துணைத் துறைகளாகப் புடவைகள், அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் (20 சதவீதம்), தாளும் தாள் உற்பத்திகளும் (17 சதவீதம்), உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திகள் (9 சதவீதம்) என்பன காணப்பட்டன. அடிப்படை உலோக உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ஆகியவற்றின் வெளியீடுகள் முறையே 42 சதவீதத்தினுலும், 10 சதவீதத்தினுலும், 3 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தன.

**அரசதுறைக் கைத்தொழில்**

1985 ஆம் ஆண்டுக் காலத்தில் அரச துறைக் கைத்தொழில்களின் நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் காணப்பட்டன. சிறந்த தரமுடைய மரங்களின் பற்றுக்குறையை ஈடுசெய்வதற்காக அரச மரக் கூட்டுத்தாபனம் தென்னம் பலகைகள் மற்றும் சுவரில் பொருத்தும் நீள்சதுரப் பலகைகள் ஆகியவற்றினை உற்பத்தி செய்யும் புதிய முயற்சிகளைத் தொடங்கியது. அரச அச்சகக் கூட்டுத்தாபனம் உற்பத்தியில் ஏற்படும் தளம்பலை நீக்கும் பொருட்டும் நியாயமான விலைகளில் அவற்றின் கிடைப்பனவை உறுதிப்படுத்தும் பொருட்டும் 1985 பெப்புருவரியிலிருந்து பயிற்சிப் புத்தகங்களை உற்பத்தி செய்யத் தொடங்கியது.

அட்டவணை 1.13

**அரசதுறை முதன்மைக் கைத்தொழில் வெளியீட்டுச் சுட்டெண்**
**(1977 = 100)**


| வகை | சனவரி–டிசெம்பர் 1983 | 1984 | 1985(அ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 73.6 | 52 5 | 48.5 |
| 1.1 பால் உற்பத்தி ... | 46.4 | 41.4 | 45.8 |
| 2. புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 127.0 | 140.9 | 185.9 |
| 2.1 புடவைகள் ... | 156.7 | 186.8 | 244.9 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | 163.0 | 149.1 | 138.4 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 135.7 | 117.2 | 142.8 |
| 5. இரசாயன உற்பத்திகள் ... | 105.1 | 125.1 | 105.8 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் ... | 98.0 | 119.9 | 105.8 |
| 5.2 ரயர் ... | 157.2 | 127.9 | 128.2 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 124.6 | 106.4 | 103.4 |
| 6.1 சீமெந்து ... | 130.1 | 111.0 | 105.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 109.2 | 75.5 | 43.6 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ... | 76.8 | 87.0 | 101.1 |
| எல்லாவகைகளும் | 106.7 | 112.9 | 106.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

உண்மை நியதிகளில், அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீடு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (12 சதவீதம்), இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் (42 சதவீதம்) என்பவற்றிலிருந்தே முக்கியமாக ஏற்பட்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவிர்ந்த அரசதுறைக் கைத்தொழில்கள் 1985 இல் 2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

## அரச துறையின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டுக் காலத்தில் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களின் செயலாற்றம் ஒரே அளவினதாகக் காணப்படவில்லை. வெளியீட்டில் பெருமளவு அதிகரிப்புக்கள் தேசிய புடவை (34 சதவீதம்), அரச அகழ்வும் கனிப்பொருள் அபிவிருத்தியும் (26 சதவீதம்), தேசிய தாள் (22 சதவீதம்), இலங்கை கனிப்பொருள், மணல் (22 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்களினுலும் பிரித்தானிய இலங்கைக் கூட்டுத் தாபனத்தினுலும் (38 சதவீதம்), தேசிய பாற்சபையினுலும் (10 சதவீதம்) பதிவு செய்யப்பட்டன. வெளியீட்டில் வீழ்ச்சிகள் பரந்தன் இரசாயனங்கள் (81 சதவீதம்), இலங்கை உருக்கு (42 சதவீதம்), அரச இறப்பர் தயாரிப்பு (37 சதவீதம்), தேசிய உப்பு (22 சதவீதம்), இலங்கை எண்ணெய், கொழுப்பு (14 சதவீதம்), இலங்கைப் பெற்றேலியம் (12 சதவீதம்), இலங்கை ஓட்டுப் பலகை (11 சதவீதம்), இலங்கை மட்பாண்டம் (8 சதவீதம்), இலங்கை சீமெந்து (5 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்களினுல் பதிவு செய்யப்பட்டன.

அரசதுறைக் கூட்டுத்தாபனங்களின் குறைந்த செயலாற்றத்திற்குப் பல் வேறுபட்ட காரணங்கள் உள்ளன. தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வட பகுதியின் இனக் கலவரங்களினுலும், தெற்கு மேற்குப் பகுதிகளின் பாதக மான வானிலை நிலைமைகளினுலும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை பாதுகாப்புக் காரணங்களுக்காக 1985 ஏப்பிறலில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. சீமெந்து உற்பத்தியும் இனக் கலவரங்களினுல் தடைப்பட்டது. அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் மூலப்பொருளாக நப்தாவைப் பயன்படுத்தி யூரியாவை உள்ளூரில் தயாரிப்பது சிக்கனமற்றது என்பதனுல் மூடப்பட்டிருக்கிறது. சபுகஸ்கந்தையிலுள்ள எண்ணெய்த் தூய்மி பேணல் வேலைகளுக்காக இரண்டு மாதங்களுக்கு மூடப்பட்டிருந்தமையினுல் பெற்றேலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு வீழ்ச்சியடைந்திருந்தது. உருக்குக் கூட்டுத்தாபனம் நிதிப் பிரச்சினைகளினுலும் மூலப்பொருட்களின் பற்றுக்குறை யினுலும் பாதிக்கப்பட்டது.

வடிசாலைகள், டயர், கனிப்பொருள், மணல், சுரங்கமகழ்தலும் கனிப்பொருள் அபிவிருத்தியும், வன்கலம் ஆகிய கூட்டுத்தாபனங்களின் விற்பனைகள் அதிகரித்த வேளையில் தேசிய பாற்சபை, எண்ணெய் கொழுப்பு, புடவைகள், ஒட்டுப்பலகை, பரந்தன் இரசாயனங்கள், வளமாக்கித் தயாரிப்பு, மட்பாண்டம், சீமெந்து, உருக்கு ஆகிய கூட்டுத்தாபனங்களின் விற்பனைகள் 1985 இல் வீழ்ச்சியடைந்தன.

1985 இல் பெருமளவு எண்ணிக்கையான அரச கூட்டுத்தாபனங்களின் ஆற்றலையிட்டுக் கடுமையான சந்தேகங்கள் ஏற்பட்டன. எனினும் சில கூட்டுத் தாபனங்களின் இலாப நட்டங்களின் மீதான தரவு கூட்டுத்தாபனத்தின் ஆற்றலை அளவிடுவதற்குச் சரியான குறிகாட்டியாக இருக்கமுடியாது. எடுத்துக்காட்டாக இவ்வாண்டுக் காலத்தில் மிகச் சிறிய அல்லது உற்பத்தி எதனையுமே மேற் கொள்ளாத சில கூட்டுத்தாபனங்கள் இலாபத்தினைப் பதிவு செய்துள்ளன. இவற் றிற்கு எடுத்துக்காட்டாக இலாபம் முக்கியமாக வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தும் தற்போதைய இருப்புக்களின் விற்பனைகளிலிருந்துமே பெறப்படுகின்றது. பரந்தன் இரசாயனங்கள் மற்றும் அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். எனினும் வடிசாலை, தாள் மற்றும் டயர், இலங்கை ஒட்சிசன், இலங்கைப் பீங்கான் போன்ற சில தொழில் முயற்சிகள் நிதியிடல் ஆற்றல் அதிகரித்துக் கொண்டதன் காரணமாக முன்னைய ஆண்டினை

## அட்டவணை 1.14

### கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1983—1985

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத் தாபனங்கள்/முயற்சிகள் | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985(அ) | 1983 | 1984 | 1985(அ) | 1983 | 1984 | 1985(அ) |
| 1. தேசிய பாறசபை ... | 9.0 | 7.5 | — | 21.3 | 25.1 | 25.0 | 30.3 | 32.6 | 25.0 |
| 2. இலங்கை எண்ணெய், கொழுப்பு ... | 25.3 | 99.1 | 6.0 | — | — | — | 25.3 | 99.1 | 6.0 |
| 3. இலங்கை சீனி ... | 122.5 | 168.8 | 316.0 | — | 7.1 | — | 122.5 | 175.9 | 316.0 |
| 4. தேசிய புடவை ... | 31.5 | 127.2 | 42.0 | 32.7 | — | — | 64.2 | 127.2 | 42.0 |
| 5. தேசிய தாள் ... | — | 5.6 | — | — | — | 27.1 | — | 5.6 | 27.1 |
| 6. அரச வளமாக்கி தயாரிப்பு ... | — | — | — | 494.7 | 537.3 | — | 494.7 | 537.3 | — |
| 7. இலங்கை உருக்கு ... | 39.1 | — | — | — | — | — | 39.1 | — | — |
| 8. தேசிய பொதியிடல் பொருட்கள் ... | — | — | — | 7.7 | 1.0 | — | 7.7 | 1.0 | — |
| 9. அரச அச்சகம் ... | — | 51.6 | 3.7 | — | — | — | — | 51.6 | 3.7 |
| 10. வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன் ... | — | — | — | 8.7 | 6.1 | — | 8.7 | 6.1 | — |
| மொத்தம் ... | 227.4 | 459.8 | 367.7 | 565.1 | 576.6 | 52.1 | 792.5 | 1,036.4 | 419.8 |

(அ) ஒப்புதலளிக்கப்பட்டது

மூலம்; திறைசேரி

விட இலாபத் தன்மையில் முன்னேற்றத்தினைக் காட்டின. பல கூட்டுத்தாபனங்களின் திருப்தியற்ற தொழிற்பாட்டுச் செயலாற்றத்திற்கு நாட்டின் சில பகுதிகளில் காணப்பட்ட பாதுகாப்பு சூழ்நிலை, மூலப்பொருட்களின் பற்றுக்குறை, தேர்ச்சி பெற்ற ஆளணியின் குறைவு, நிதிப் பிரச்சினை என்பன காரணமாயிருக்கலாம்.

1985 ஆம் ஆண்டுப் பகுதியில் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளுக்கான அரசின் மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 4,200 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 3,680 இலட்சம் அல்லது 88 சதவீதம் மூலதன மாற்றல்களாகவும் ரூ. 520 இலட்சம் அல்லது 12 சதவீதம் நடைமுறை மாற்றல்களாகவும் இருந்தன. அரசதுறைக் கைத்தொழிலுக்கான மொத்த அரச மாற்றல்களில் ரூ. 3,160 இலட்சம் அல்லது 75 சதவீதத்தினை இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் பெற்றது. மாற்றல்களின் ஏனைய முக்கிய பெறுநர்களாகத் தேசிய புடவை, தேசிய தாள், தேசிய பாற்சபை என்பன காணப்பட்டன. அரசதுறைக் கூட்டுத்தாபனங்கள் அவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், அரசின் வரவு செலவுத் திட்டத்தில் தங்கியிருப்பதைக் குறைக்கும் பொருட்டும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் 1985 இல் குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்டமை முக்கியமானதொரு விடயமாகும்.

**வலுவும் எரிபொருளும்**

1985 இல் கைத்தொழில் எரிபொருளின் விற்பனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு 1985 இல் வெப்ப மின்வலு உருவாக்கத்தில் தங்கியிருப்பது பெருமளவிற்குக் குறைவடைந்தமையின் விளைவாக இலங்கை மின்சபையின் பாரடீசல் மற்றும் உலை எண்ணெயின் நுகர்வில் ஏற்பட்ட குறைவே முக்கிய காரணமாகும்.

அட்டவணை 1.15

**கைத்தொழிலில் வலு, எரிபொருள் என்பனவற்றின் பயன்பாடு**

| விடயம் | 1983 | 1984 | 1985(அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (ஆ) (கிலோவாட் மணித்தியாலங்கள்) ... | 752.0 | 788.3 | 846.0 |
| 1.1 சிறு கைத்தொழில் ... | 29.0 | 31.5 | 35.1 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... | 339.7 | 370.5 | 409.7 |
| 1.3 பெரிய கைத்தொழில் ... | 383.3 | 386.3 | 401.2 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் | | | |
| ('000 மெற்றிக் தொன்கள்) ... | 538.6 | 293.5 | 163.8 |
| 2.1 பார டீசல் ... | 285.5 | 78.6 | 23.5 |
| 2.2 உலை எண்ணெய் ... | 253.1 | 214.9 | 140.3 |

மூலங்கள்: இலங்கை மின் சபை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(அ) தற்காலிகமானவை.
(ஆ) தயாரிப்பு, ஏற்றுமதி செய்முறை கைத்தொழில்களை உள்ளடக்குகின்றது. சிறு கைத்தொழில் 50 கி. வாட்டுக்கு குறைந்ததும் நடுத்தரக் கைத்தொழில் 50-500 கி. வாட்டையும் பெரும் கைத்தொழில் 500 கி. வாட்டுக்கு மேற்பட்ட இயல்வினைக் கொண்ட கூறுகளாகும்.

மீளாய்விற்குரிய ஆண்டில் கைத்தொழிலில் மின்வலுவின் பயன்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தினுல் அதிகரித்தது. இது சிறிய, நடுத்தர, பெரிய கைத்தொழில்களில் முறையே காணப்பட்ட 11 சதவீத, 10 சதவீத, 4 சதவீத அதிகரிப்புக்களினுல் ஏற்பட்டது.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்

1985 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினுல் 13 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் 1985 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 211 ஆக விளங்கியது. இவற்றில் 119 ஏற்கனவே கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தன. மொத்தம் 61 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளேயும், 16 தொழில் முயற்சிகள் அவ்வலயத்திற்கு வெளியேயும் உற்பத்தியிலீடுபட்டிருந்தன. வர்த்தக உற்பத்தியிலீடுபட்டிருந்த செயற்றிட்டங்களில் 38 தைக்கப்பட்ட ஆடைகளின் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளில் தொழிலில் அமர்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1984 திசெம்பரின் 29,477 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 1985 திசெம்பரில் 32,329 ஆட்களாகக் காணப்பட்டது.

1985 இல் ஒப்புதலளிக்கப்பட்ட பதின் மூன்று செயற்றிட்டங்களில் புடவை மற்றும் தயாரிப்பு உற்பத்திகள் ஒவ்வொன்றிலும் ஐந்தும், உணவு, இரசாயனம், நாணயத்தாள் அச்சிடல் ஆகியவற்றில் ஒவ்வொன்றும் ஈடுபட்டன.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1985 இல் ரூ. 38,020 இலட்சமாக (சிஎஉ 1,380 இலட்சம்) விளங்கின. இது முன்னைய ஆண்டினைவிட 7 சதவீதம் அதிகமானதாகும். ஆடைகளின் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டினைவிட 6 சதவீதம் உயர்வாக இருந்ததுடன் ஏற்றுமதி வருவாய்களில் மிக உயர்ந்த தொகைக்கும் (80 சதவீதம்) தொடர்ந்தும் வகை கூறின. ஆடைத்துறையில் ஒரு ஊழியருக்கான ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ. 115,375 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 115,011 ஆக விளங்கியது.

பியகமவில் உள்ள இரண்டாவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் இன்றியமையாத உள்ளமைப்பு அபிவிருத்திகள் நிறைவடைந்துள்ளன. இங்கு ஆறு முதலீட்டாளர்கள் தமது தொழிற்சாலைகளை அமைத்துள்ளதுடன் தொழிற்சாலை கட்டிட வேலைகளும் 1985 இன் ஆரம்பத்தில் தொடக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் இச்செயற்றிட்டங்களில் ஒன்று உற்பத்தியினைத் தொடங்கியுள்ள வேளையில் இன்னென்றின் தொழிற்சாலைக் கட்டிட வேலைகள் முற்றுப் பெற்றுள்ளன.

அட்டவணை 1.16

## முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்—தொழில் வாய்ப்பும் ஏற்றுமதி வருவாய்களும் 1984—1985

| வகை | 1984 | | 1985(அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப. இ. ரூ.. | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) எண்ணிக்கை | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.எ.பெ.) ப.இ.ரூ. |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 30 | 116.0 | — | 6.5 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் ... | 25,041 | 2,889.1 | 26,541 | 3,052.5 |
| 3. மர, மர உற்பத்திகள் ... | — | 0.1 | — | — |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | — | — | — | — |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ... | 1,652 | 136.3 | 1,399 | 164.8 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 226 | 2.7 | 1,267 | 122.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | — | — | — | — |
| 8. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ... | 234 | 85.8 | 135 | 50.3 |
| 9. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (வேறெங்கும் குறிப்பிடப்படாதவை) | 1,934 | 108.0 | 2,493 | 211.2 |
| 10. பணிகள் (ஆ) | 360 | 199.4 | 494 | 193.9 |
| மொத்தம்... | 29,477 | 3,537.4 | 32,329 | 3,801.6 |

மூலம்: கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) "எயர் லங்கா" நீங்கலாக.